O.S. 725/2020　　　　　　　　　　　　　　　　　　தேதி. 02.09.2024

Name. உமா (வா.சா.1)

**<u>வா.சா. 1 ன் குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)</u>**

நான் பட்டப்படிப்பு முடித்துள்ளேன். எல்லா வகை துணிகளையும் வாங்கி விற்பனை செய்யும் தொழில் 2011–2021 வரை செய்து வருகிறேன். 2021 க்கு பிறகு அந்த தொழில் நான் நடத்தவில்லை. அந்த நிறுவம் பதிவு செயய்ப்பட்ட நிறுவனம். தமிழ்நாடு அரசின் விற்பனை வரிக்காகவும், கரூர் நகராட்சியில் தொழில் செய்வதற்கும் பதிவு செய்துள்ளோம். எங்கள் நிறுவனத்தில் கணக்குகள் பராமரிக்கப்பட்ட வருகிறது. எங்கன் நிறுவனத்திற்காக வரவு செலவு கணக்குகளை வருமான வரி கணக்கு ஆண்டுதோறும் காண்பித்து வருகிறோம். என் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை என் கணவர் தான் பராமரித்து வருகிறார். எனக்கு நிறுவனத்தின் மூலமாக துணிகள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் தான் செய்து வருகிறேன். வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்யவில்லை. என் நிறுவனத்திற்காக எங்கு துணி வாங்கப்படும், எந்த வனையில் வாங்கப்படும் என்ற விவரம் என் கணவருக்கு தான் தெரியும். என் கணவர் ஏஆர்சி கார்மென்ட்ஸ் என்ற பெயரில் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். நானும் என் கணவரும் ஒன்றாகத்தான் குடியிருந்து வருகிறோம். இன்று அவர் என்னுடன் வந்துள்ளார். 1 எ, மினி அப்பார்ட்மெண்ட், சோழியம்மன் கார்டன், தீரன் சின்னமலை, 6 வது கிராஸ், வாங்கபாளையம் என்பது நாங்கள் முன்பு குடியிருந்து முகவரி என்றால் சரிதான். பிரதிவாதியை எனக்கு நேரடியாக அறிமுகம் கிடையாது என்று சொன்னால் என் கணவர் மூலமாக தான் தெரியும். பிரதிவாதிக்கு எனக்கு என் கணவரின் நண்பர் மூலம் எனக்கு அறிமுகம். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து தெரிந்து கொண்டேன். இந்த வழக்கிற்கு பின்பு பிரதிவாதி என் கணவருக்கு எவ்வாறு அறிமுகம் ஆனார் என்று என் கணவரிடம் கேட்டு தெரிந்த கொண்டேனா என்று கேட்டால் இல்லை. துணியை வாங்கும் போது துணிக்கான மதிப்பை என் கணவர்

ரொக்கமாகவும், காசோலைகளும் கொடுப்பார். நான் உரிமையாளராக உள்ள அணு டிரேடர்ஸ் நிறுவனத்தை என் கணவர் தான் முழு நிர்வாகம் செய்து வந்தார். அணு டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு சப்ளை செய்யும் துணிக்களுக்கான தொகையை ரொக்கமாகவோ காசோலையாகவோ என் கணவர் மூலம் கொடுப்பேன். அவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் ரொக்கம் மற்றும் காசோலைகள் கண்ட தொகைககள் என் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளிலும் நிறுவனத்தின் வங்கி கணக்குகளிலும் காண்பிக்கப்படும் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் ராசா எ டிரேடர்ஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்த விவரம் எனக்கு தெரியும். அந்த நிறுவனத்தில் துணிகள் விற்பனை செய்து வந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய நிறுவனத்திற்கும் பிரதிவாதி ராசா எ டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் இடையே துணி சம்மந்தமாக வரவு செலவு கணக்குகள் கிடையாது. என் கணவர் நடத்தி வரும் ஏஆர்சி கார்மெண்ட்ஸ் நிறுவனததிற்கும் பிரதிவாதி ராசா எ டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் இடையே துணி கொள்முதல் வரவு செலவு கணக்குகள் உண்டா என்று எனக்கு தெரியாது. என்னுடைய கணவர் நடத்தி வரும் நிறுவனத்திற்காக பிரதிவாதியின் நிறுவனத்திலிருந்து துணிகள் கொள்முதல் செய்த போது என் கணவர் நடத்தி வருடம் நிறுவனத்தில் ரொக்கமோ வங்கியில் இருப்போ இல்லாத சமயத்தில் என் நிறுவனத்தின் ரொக்க தொகையும், காசோலைகளும் பிரதிவாதியின் நிறுவனத்திற்காக வழங்கப்பட்டது என்று சொன்னால் இல்லை. மேற்சொன்ன விவரம் பிரவாதியின் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளாரா என்று சொன்னால் சரிதான். எனக்கு பிரதிவாதிக்கும் இடையே வியாபார ரீதியாகவோ, வணிக ரீதியாகவோ பெறப்படவில்லை தனிப்பட்ட முறையில் பெற்ற கடனுக்காக தான் வரவு செலவு உண்டு. வட்டி விகிதத்திற்கு எவ்வித ஆவணங்களும் இல்லை. வட்டி விகிதம் எங்கு வைத்து பேசப்பட்டது என்று என்னுடைய வழக்குரையில் சொல்லப்படவில்லை. நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்வது போன்று பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் கடன் பெற்றுக் கொண்டு காசோலை வழங்கியது இல்லை என்றால் சரியல்ல. என் நிறுவனத்திற்கும் பரிதிவாதிக்கும் இடையே வரவு செலவு கணக்கு கிடையாது என்றும், பிரதிவாதியின் நிறுவனத்திலிருந்து

என் கணவர் நடத்தி வரும் ஏஆர்சி கார்மென்ட்ஸ் நிறுவனத்திற்காக துணி கொள்முதல் செய்வதற்காக என் கணவர் கொடுக்க வேண்டிய தொகைக்காக என் கணவர் ஏஆர்சி கார்மென்ட்ஸ் நிறுவனத்தின் காசோலையை கொடுக்காமல் என் நிறுவனத்தின் காசோலை மூலமாக பிரதிவாதியின் வங்கிக்கு தொகை வரவு வைக்கப்பட்டதை சாதகமாக பயன்படுத்தி பிரதிவாதிக்கு என் நிறுவனத்தின் சார்பாக கடன் கொடுத்ததாக அனுமானம் ஏற்பட வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. மின்னாம்பள்ளி, குடித்தெருவில் சடையப்பன் மகன் சதீஷ்குமார் என்பவரை எனக்கு தெரியாது. எனக்கு கடன் தொகை பற்றி எந்த் விவரமும் தெரியாது என்றும், என் கணவர் தான் இந்த வழக்கினை நடத்தி வருகிறார் என்றும், பெயரளவில் என் பெயரில் வழக்கு தாக்கல் செயய்ப்பட்டு வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த தாவா வழக்கு கடன் தொகை சம்மந்தமான குறிப்புகள், பெயரேடுகள் என் கைவசம் உள்ளது. இந்த வழக்கு பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். சண்முகவேல்ராஜ்,
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.